வேலூர் மண்டல வனப்பாதுகாவலரின் செயல்முறை ஆணைகள்
பிறப்பிப்பவர்: து.சுஜாதா, இவப.,
வனப்பாதுகாவலர்

செ.மு.ஆ. எண்:ப3/120/2021 நாள்: 03.08.2022.

பொருள்: பணி – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படையில் திரு.ஜி.பிரதாப்குமார், இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்டது – பணிவரன்முறை செய்தல்-தொடர்பாக.

பார்வை: 1.முதன்மை தலைமை வனப்பாதுகாவலர், (துறைத்தலைவர்) சென்னை கடிதம் எண்:ண2/18995/2015, நாள்:6.8.2019.

2.கூடுதல் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர், வேலூர் மண்டலம் கடிதம் எண்:ப3/8452/2019, நாள்:05.09.2019.

3.மாவட்ட வன அலுவலர், திருப்பத்தூர் வனக்கோட்டம் செ.மு.ஆ.எண். ப2/5583/2019, நாள்: 20.9.2019

4.அரசாணை (நிலை) எண்:48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1)த் துறை நாள்:26.02.2021.

5.முதன்மை தலைமை வனப்பாதுகாவலர், சென்னை (துறைத்தலைவர்) கடிதம் எண்:ண2/9736/21, நாள்:17.3.21.

6. மாவட்ட வன அலுவலர், திருப்பத்தூர் கோட்டம் எண். ப3/5583/2020, 31.12.2020, 28.07.2021, 06.09.2021, 05.04.2022 மற்றும் 16.05.2022

-----

ஆணை:

பார்வை 1-ல் காணும் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (துறைத்தலைவர்) கடிதத்தின்படி கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்ய பார்வை 2ல் காணும் இவ்வலுவலக கடிதத்தின்படி திருப்பத்தூர் வனக்கோட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை 3-ல் காணும் மாவட்ட அலுவலர் திருப்பத்தூர் கடிதத்தின்படி, திருப்பத்தூர் மாவட்ட வன அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணியமர்த்தப்பட்ட திரு.ஜி.பிரதாப்குமார், இளநிலை உதவியாளர் பார்வை 4ல் காணும் அரசு ஆணையில் வழங்கப்பட்ட தெளிவுரையின்படி அவர் பணியில் சேர்ந்த நாளான 20.09.2019 முற்பகல் முதல் பணிவரன் முறை செய்து ஆணையிடப்படுகிறது.

ஒம்/- து.சுஜாதா
வனப்பாதுகாவலர்
வேலூர் மண்டலம், வேலூர்-9.

பெறுநர்
திரு.ஜி.பிரதாப்குமார், இளநிலை உதவியாளர்
(மாவட்ட வன அலுவலர், திருப்பத்தூர் வனக்கோட்டம் மூலமாக)

நகல்: மாவட்ட வன அலுவலர், திருப்பத்தூர் வனக்கோட்டம், திருப்பத்தூர்.

பணிவரன்முறை செய்யப்பட்ட விவரத்தினை திரு.ஜி.பிரதாப்குமார், இளநிலை உதவியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்து அதன் விவரத்தினை இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்குமாறு மாவட்ட வன அலுவலர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

நகல்: முதன்மை தலைமை வனப்பாதுகாவலர், (துறைத் தலைவர்) சென்னை-15.
தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

நகல்:செயல்முறை ஆணை கோப்பிற்கு

உதிரி-1

//உ.ந.உ.ப//

Durgadevi 3/8/2022
கண்காணிப்பாளர்

3/8/2022